**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.449/2024**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 28–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை –II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | –திரு.விஸ்வநாதன் PW–8 | தொழில் | – |
| த/க பெயர் – | | வயது | – |
| அலைபேசி – | | முகவரி | – |
| ஆதார் எண் – | | | |

**(எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை:–**</u>

1) நான் தற்போது ஈரோடு தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு கோப்புகளின் அடிப்படையில் தான் தெரியும் கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான அருள் எனக்கு நன்கு தெரியும் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம். கடந்த 24.3.2017 தேதியன்று இரவு 12.15 மணிக்கு ஈரோடு தாலுகா காவல் நிலைய

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:22:41 +0530

சரகத்திற்கு உட்பட்ட ஈரோடு கரூர் மெயின் ரோடு பகவதி பஸ் கோச் எதிரில் எதிரி சிவகுமார் என்பவர் அரசு பேருந்து வேகமாக ஓட்டி வந்தார் என்றும் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்றும் அப்போது எதிர் திசையில் இடது புறம் ஓரமாக குணசேகரன் என்பவர் ஓட்டி வந்த ஹீரோ சிடி டான் TN 34 W 6104 என்ற வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அந்த விபத்தில் குணசேகரன் என்பவர் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்ததில் பலத்த அடிப்பட்டு சிகிச்சை பலனின்றி ஈரோடு அரசு மருத்துவமனையில் 24.3.2017-ம் தேதி அன்று அதிகாலை 1.15 மணிக்கு இறந்து போய்விட்டார் என்றும் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் 192(A) MV Act ன் கீழ் மணி என்பவர் கொடுத்த புகாரினை பெற்று நிலையை தலைமை காவலர் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கையை வைத்து பதிவு செய்த பின்பு மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு கே ஆர் அருள் என்பவர் வசம் ஒப்படைத்தார்.

2) மேற்படி திரு அருள் ஆய்வு கோப்பினை பெற்று சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகளான ஆறு, மணி, மல்லிகா, பாலு, சந்திரசேகர் மற்றும் நந்தினி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான ராமகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார் சம்பவத்தை பற்றி புகார் கொடுத்த மணி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் சாட்சிகள்

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:22:47 +0530

முனியப்பன் மற்றும் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். அவர்களிடையே தனித்தனியே விசாரித்து வாக்குமூலமும் பதிவு செய்தார். மேற்படி முனியப்பன் மற்றும் மனோகரன் ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து செய்திருந்தனர். மேலும் சாட்சி முத்துவேல் என்பவர் இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கரூர் கிளை இரண்டில் பணியை ஒதுக்கீடு செய்ததற்காக அவரிடம் விசாரித்து தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். நிலையமாஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் தக்க நிலைய பிணையில் விடுவித்தார். இந்த வழக்கில் இறந்து போன குணசேகரனுக்கு பிரேதத்தின் மீது காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் பெற்று பிரேத பரிசோதனை செய்து குணசேகரன் ஏற்பட்ட காயங்கள் குறித்து விசாரணை செய்து இறப்பு குறித்து பிரேத பரிசோதனை சான்று வழங்கிய டாக்டர் சரவணகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரிடம் இருந்து பிரேத விசாரணை அறிக்கை பெற்றார். மேலும் அவரிடம் இருந்து பிரேத பரிசோதனையை அறிக்கையும் பெற்றார்.

3) இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஆய்வு செய்து ஆய்வு சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு சதாசிவம் என்பவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் அவரிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றார் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த தலைமை காவலர் ராமச்சந்திரன்

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:22:53 +0530

என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். தனது விசாரணை முடித்துக் கொண்டு கடந்த 20.06.2017 தேதி அன்று எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) மற்றும் 192 MV Act ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார். இந்த விவரங்கள் எனக்கு அவர் அளித்த கோப்புகளில் இருந்து தெரியும்

4) முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**, பார்வை மகஜர் **அ.சா.ஆ.3**, மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**, வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5**, பிரேத பரிசோதனை சான்று **அ.சா.ஆ.6**, பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7**.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோப்புகளின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தை பார்த்தற்கு நேரடியான சாட்சியம் இல்லாத நிலையில் சொன்ன விதத்தில் விபத்து ஏற்பட்டு இருப்பதாக நான் என்னுடைய கூற்று ஏற்றுக்கொள்ள தகுதி அல்ல என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:22:59 +0530

**சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:23:08 +0530

Chief Judicial Magistrate,
Erode.